16.11.2018 எம்.சி.17/2016

**ம.சா.1 (பவளக்கொடி) குறுக்கு விசாரணை**

நான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ளேன். நான் கிராம சுகாதார செவிலியராக பணிபுரிந்து சென்னிமலையில் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் அரசாங்க பணியில் இருந்ததால் நான் ஓய்வூதியம் பெறுகிறேன். நான் எதிர்மனுதாரருடன் சுமார் 25 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தேன். எதிர்மனுதாரர் பஞ்சாயத்து கிளார்க்காக இருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். எனக்கு எதிர்மனுதாரர் வீடும், மாந்தோப்பும் வாங்கிக் கொடுத்து அவைகள் என்னுடைய பொறுப்பில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் மாந்தோப்பை குத்தகைக்கு விட்டும் வீட்டை வாடகைக்கு விட்டும் குத்தகை தொகை மற்றும் வாடகைத் தொகையையும் பெற்று வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2, 3 மனுதாரர்களுக்கான பராமரிப்புத் தொகையை எதிர்மனுதாரர்தான் செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. 2, 3 மனுதாரர்களை நான் பராமரித்து வருவதாக மனுவிற்காக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2, 3 மனுதாரர்களின் படிப்புச் செலவை எதிர்மனுதாரர்தான் செய்து வருகிறார் என்று சொன்னாலும் சரியல்ல. நான் ஓய்வு பெற்றபொழுது எனக்கு ஓய்வூதியத் தொகையை கொடுத்தார்கள். வீடு என் பெயரில் உள்ளது. வீடு தவிர 5 செண்ட் இடம் உள்ளது. திருமண செலவை என்னுடைய பெற்றோர்கள் செய்ததாக தவறாக சொல்கிறேன் என்றும், எதிர்மனுதாரர்தான் திருமண செலவை செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு என் பெற்றோர்கள் 10 பவுன் நகையும் சீர் செய்ததாக மனுவிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2-ம் மனுதாரர் தற்போது வியாபாரம் செய்து வருகிறார். மனுவில் 2ம் மனுதாரர் வயது 26, 3-ம் மனுதாரர் வயது 23 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் ஓய்வூதியத் தொகை பெறுவதாலும், 2-ம் மனுதாரர் வியாபாரம் செய்து வருவதாலும், 3-ம் மனுதாரர் உரிய வயதை அடைந்து விட்டதாலும், நாங்கள் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்ச தொகை பெற இயலாது என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு வருமானம் வருகிறது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு பல பெண்களுடன் தொடர்பு உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் தவறாக மனு தாக்கல் செய்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

sd/......

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை